

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட கந்தன்சாவடி பகுதியில் கனமழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், துணை மேயர் மு.மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதா கிருஷ்ணன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மீன்வளம் – மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.12.2023) பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட தரமணி, பாரதிநகர் பகுதிகளில் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், துணை மேயர் மு.மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மீன்வளம் – மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மங்கத் ராம் சர்மா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### 'மிக்ஜாம்' புயல்!

# பேரிடர் பாதிப்புகளை விரைந்து களைந்திடுவீர்!

### கழகத்தினருக்கு கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, டிச. 7-

'மிக்ஜாம்' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கழகத்தினர் உடனடியாக மீட்புப் பணியில் ஈடுபடுவீர் என்று கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதுகுறித்து கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத்தளப் பதிவு வருமாறு:-

**அமைச்சர்கள், அதிகாரிகள், காவல்துறையினர், தூய்மைப் பணியாளர்கள், மாநகராட்சிப் பணியாளர்கள் என ஒட்டுமொத்த அரசு இயந்திரமும் நம்மைச் சூழ்ந்திருக்கும் #CycloneMichaung பேரிடரின் பாதிப்புகளை விரைந்து களையப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள்.**

**களத்தில் இறங்கி உதவிகள் செய்து கொண்டிருக்கும் கழகத்தினருடன், இன்னும் பல தோழர்கள் உடனே தோள் சேர்ந்து நிவாரணப் பணிகளில் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.**

**பாதிப்புகளில் இருந்து மீண்ட பகுதிகளைச் சேர்ந்த கழகத் தோழர்கள் விரைந்து வாருங்கள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### சட்டத்தின் வழியாக

# மக்களை சமமாக்கப் போராடிய புத்துலக புத்தர்!

### அண்ணல் அம்பேத்கர் நினைவு தினத்தையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, டிச. 7-

அண்ணல் அம்பேத்கர் அவர்களின் நினைவு நாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-



**இந்திய மண்ணில் மக்களைப் பிறப்பால் பிளவுபடுத்தி, சாதிப் பிரிவினையால் ஒடுக்கும் கொடுமைகளுக்கான மூலகாரணங்களை எதிர்த்து புரட்சி செய்தவர்!**

**உண்மையான பிரிவினை எது என்பதை எடுத்துச்சொல்லி, சட்டத்தின் வழியாக மக்களைச் சமமாக்கப் போராடிய புத்துலக புத்தர்!**

**அறிவுப் பேரொளி அம்பேத்கரைப் போற்றுவோம்!**

**எத்தகைய இடர்களும் சூழ்ச்சிகளும் வந்தாலும், சமத்துவத்தை நோக்கிச் சளைக்காமல் உழைக்கப் புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளில் உறுதியேற்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### பொது வெளியில் கருத்துகளைச் சொல்லும்போது கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு தேவை!

# தனிப்பட்ட கருத்துகள் சொல்வதை தவிர்த்திடுக!

### கழக நிர்வாகிகளுக்கு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி வேண்டுகோள்!

*சென்னை, டிச. 7-*

*கழக நிர்வாகிகளுக்கு அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கையில், பொது வெளியில் கருத்துகளைச் சொல்லும்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டிய கடமை - கண்ணியம் - கட்டுப்பாட்டை முறையாகப் பின்பற்றி, நாகரிகத்தையும், பண்பாட்டையும் காத்திடும் வகையில் செயல்பட வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளார்.*

*"கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி விடுத்துள்ள அறிக்கை" வருமாறு:-*



*நடந்து முடிந்த ஐந்து மாநிலச் சட்டசபைத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துத் தெரிவித்த தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் செந்தில்குமார், தவறான பொருள் கொள்ளத்தக்க சொல் ஒன்றைப் பயன்படுத்தி இருந்தார். இதனை அறிந்த கழகத் தலைவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், செந்தில்குமாரைக் கடுமையாகக் கண்டித்தார்கள்.*

*பகிரங்கமாக மன்னிப்புக் கேட்கும் அறிக்கை ஒன்றை செந்தில்குமார் வெளியிட்டு உள்ளார்.*

*செந்தில்குமார் வெளியிட்ட அறிக்கையில், "முடிந்த ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கருத்துக் கூறிய நான், தவறான பொருள் அளிக்கும் வகையில் ஒரு சொல்லைப் பயன்படுத்தி விட்டேன்.*

*எந்த உள்நோக்கத்துடனும் அந்த சொல்லை பயன்படுத்தவில்லை,*

*அது தவறான பொருள் தருவது என்பதால் வெளிப்படையாக மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்." என்று சொல்லி இருக்கிறார்.*

*பொதுவெளியில் கருத்துகளைச் சொல்லும்போது நாகரிகத்தையும் பண்பாட்டையும் காக்கும் வகையில் அனைவரும் நடந்து கொள்ள வேண்டும் என்று தலைமைக் கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.*

*பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சுட்டிக் காட்டிய கடமை - கண்ணியம் கட்டுப்பாடு ஆகிய மூன்றையும் அனைவரும் முறையாகப் பின்பற்றியாக வேண்டும். மேலும், அகில இந்தியப் பிரச்சினைகள் பற்றிக் கருத்துச் சொல்லும் போது, தனிப்பட்ட முறையில் கருத்துகளைச் சொல்வதைத் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்கிறேன்.*

*இவ்வாறு ஆர்.எஸ். பாரதி தமது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.*

# அண்ணல் அம்பேத்கர் நினைவு தினம்!

### சிலைக்கு அமைச்சர் கே.எஸ்.மஸ்தான் மரியாதை!

*செஞ்சி, டிச. 7 -*

*விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் டாக்டர் அம்பேத்கரின் 67 வது நினைவு தினம் நேற்று அனுசரிக்கப்பட்டது. இதை முன்னிட்டு செஞ்சி பேருந்து நிலையம் எதிரில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த டாக்டர் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார்.*

*நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை ,பொதுக்குழு உறுப்பினர் மணிவண்ணன், நகரச் செயலாளர் கார்த்திக், பேரூராட்சி மன்ற துணை தலைவர் ராஜலட்சுமி செயல்மணி, பொருளாளர்நெடுஞ்செழியன், மாவட்ட பிரதிநிதி ஜெ.எஸ். சர்தார், பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் பொன்னம்பலம்,மசூமித்ரா சங்கர், சீனிவாசன், நூரஜகான் ஜாபர், சிவகுமார், ஆவின் இயக்குனர் ஆறுமுகம், மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர் சேகர், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர் பிரபு, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் சுதாகர், தொண்டரணி பாஷா, செஞ்சி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் ஐம்போதி பழனி, துணை அமைப்பாளர் பழனி,முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் பாலகிருஷ்ணன், வழக்கறிஞர்கள் பாபு, சந்திரன், நிர்வாகிகள் கறிவேப்பிலை ஏழுமலை, பஸ் ஸ்டாண்ட் செல்லன் , சம்பத், ராம்குமார், ரசூல், கோகுல், ஹாஜி உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*

### தெலுங்கானா முதல் மந்திரியாக

# காங்கிரஸ் தலைவர் ரேவந்த் ரெட்டி இன்று பதவியேற்பு!

*புதுடெல்லி, டிச. 7-*

*தெலுங்கானா மாநிலம் உதயமானது முதல், அங்கு பி.ஆர்.எஸ் கட்சியின் சந்திரசேகர ராவ் 2 முறை முதல் மந்திரியாக பதவி வகித்தார். இதனை தொடர்ந்து தெலுங்கானாவின் 3வது சட்டசபைத் தேர்தல் கடந்த நவம்பர் மாதம் 30ஆம் தேதி நடைபெற்றது. 119 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெற்றது. இந்த தேர்தலில் காங்கிரஸ், பாஜக, பிஆர்எஸ் இடையே மும்முனைப் போட்டி நிலவியது.*

*இதையடுத்து, வாக்கு எண்ணிக்கை 3ஆம் தேதி நடைபெற்றது. காங்கிரஸ் 64 தொகுதிகளில் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கிறது. சந்திரசேகர ராவின் பிஆர்எஸ் கட்சி 39 தொகுதிகளிலும், ஏ.ஐ.எம்.ஐ.எம் கட்சி 7 தொகுதிகளிலும், பாஜக 8 தொகுதிகளிலும், காங்கிரஸ் கட்சியின் கூட்டணி கட்சியான இந்திய கம்யூனிஸ்ட் தான் போட்டியிட்ட ஒரு தொகுதியிலும் வெற்றி பெற்றது. தெலுங்கானா மாநிலம் உருவாகி முதன்முறையாக காங்கிரஸ் ஆட்சி அமைக்க உள்ளது.*

*இந்த நிலையில் தெலுங்கானாவின் புதிய முதல்மந்திரியாக மாநில காங்கிரஸ் தலைவர் ஏ.ரேவந்த் ரெட்டி இன்று (வியாழக்கிழமை) ஐதராபாத்தில் பதவியேற்கிறார்.*

*டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைமையகத்தில் இதை நேற்று முன்தினம் அறிவித்த பொதுச்செயலாளர் கே.சி.வேணுகோபால், 'கட்சியின் தேர்தல் பார்வையாளர்களின் அறிக்கையின் அடிப்படையிலும், மூத்த தலைவர்களுடன் நடத்திய ஆலோசனையின் முடிவிலும், காங்கிரஸ் சட்டசபை கட்சித் தலைவராக ரேவந்த் ரெட்டியை நியமிப்பது என கட்சித் தலைவர் முடிவு செய்துள்ளார்' என்றார்.*

*ரேவந்த் ரெட்டியுடன் நாளை எத்தனை மந்திரிகள் பதவியேற்பார்கள், துணை முதல்மந்திரிகள் யாரும் இடம்பெறுவார்களா என்ற கேள்விகளுக்கு அவர் பதில் அளிக்கவில்லை.*

*கே.சி.வேணுகோபாலின் அறிவிப்பின்போது, கர்நாடக துணை முதல்மந்திரியும், கட்சியின் தெலுங்கானா தேர்தல் பார்வையாளருமான டி.கே. சிவக்குமார், மற்றொரு பார்வையாளரும், பொறுப்பு பொதுச்செயலாளருமான மாணிக்ராவ் தாக்கரே ஆகியோர் உடனிருந்தனர்.*



புதுடெல்லியில் அம்பேத்கர் அவர்களின் 67வது நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

# வலுவிழந்தது மிக்ஜாம்!

புதுடெல்லி, டிச. 7–

தமிழகம், ஆந்திராவில் பலத்த சேதங்களை ஏற்படுத்திய மிக்ஜாம் புயல் வலுவிழந்துவிட்டதாகவும் இருப்பினும் நேற்று ஒருசில மாநிலங்களில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மிக்ஜாம் புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமான நிலையில் அது மேலும் வலுவிழந்து இன்னும் ஒருசில மணி நேரங்களில் காற்றழுத்த தாழ்வு நிலையாகும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது. இருப்பினும் நேற்று (டிச.6) தெலங்கானா, சத்தீஸ்கர், தெற்கு கடலோர ஒடிசா ஆகிய மாநிலங்களில் ஆங்காங்கே கன மழை பெய்துள்ளது. என இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்களை கடந்த சில நாட்களாக புரட்டிப்போட்ட மிக்ஜாம் புயல் நேற்று முன்தினம் மாலை ஆந்திர மாநிலம், பாபட்லா அருகே 110 கி.மீ. வேகத்தில் கரையைக் கடந்தது. இதனால், ஆந்திராவில் பல ஏக்கர் விவசாய பயிர்கள் நாசம் அடைந்தன. நெல்லூர் மற்றும் திருப்பதி ஆகிய நகரங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன. இந்நிலையில், மிக்ஜாம் புயல் வலுவிழந்து காற்றழுத்த தாழ்வு மண்டலமான நிலையில் அது மேலும் வலுவிழந்து இன்னும் ஒரு சில மணி நேரங்களில் காற்றழுத்த தாழ்வு நிலையாகும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மரக்காணம் வட்டம் அனுமந்தையில் தாழ்வான பகுதியில் குடியிருந்த 13 குடும்பங்களைச் சேர்ந்த 53 நபர்களுக்கு உணவு,குடிநீர் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்பட்டு வருவது குறித்து உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி கேட்டறிந்து ஆறுதல் கூறினார். சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர் இரா.இலட்சுமணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா. ஜனகராஜ், துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், கோட்டக்குப்பம் நகர மன்றத் தலைவர் எஸ். எஸ். ஜெய மூர்த்தி, ஒன்றிய குழுத் தலைவர் உஷா. பி. கே. டி. முரளி, ஒன்றியச் செயலாளர்கள் பி. கே. டி. முரளி, கிளியனூர் இராஜி, மைதிலி இராஜேந்திரன், ஒன்றிய குழுத் தலைவர் தயாளன், நகர மன்றத் தலைவர் இரவிக்குமார், துணைத் தலைவர் முபாரக் , பழனி உள்ளிட்ட நகர மன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.